

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் சி.ஆர்.மணிவண்ணன், சி.ஆர்.மணிமாறன் ஆகியோரது தந்தை முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சித.ரெங்கராஜன் படத்திறப்பு விழாவில் .புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி கலந்து கொண்டு சித.ரெங்கராஜன் படத்தை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, எஸ்.ஆர்.கலையரசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற மொழிப்போர் தியாகி மு.மா.சண்முகசுந்தரம் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் மு.மா.ச.முருகன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாநகர் மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, கழக தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மெட்டல் கண்ணப்பன், ஆனந்த குமார், பொதுக்குழு உறுப்பினர் புதூர் மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## 2026 சட்டமன்றத் தேர்தலில்

# திருச்சி மாவட்டத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற பாடுபடுவோம்!

## திருச்சி தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

திருச்சி, செப். 3-

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்ட மன்ற பொதுத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறுவோம் என்ற இலக்கை நோக்கி திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, இரண்டாவது பொது உறுப்பினர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (01.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) திருச்சி காவேரி பாலம் சிந்தாமணி அருகில் உள்ள தேசிய பள்ளி மைதானத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

மாநகரக் கழக செயலாளர் மதிவாணன் வரவேற்புரையில், மாவட்ட அவை தலைவர் கோவிந்தராஜன் தலைமை, திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, கவிஞர் சல்மா, செந்தில், திவ்யா, மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், லீலாவேலு, குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவட்ட துணைச் செயலாளர் மூக்கன் நன்றியுரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் -நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சி தெற்கு மாவட்டத்தில் 01.09.2024 அன்று நடைபெற்ற இரண்டாவது பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் சீர்மிகு நல்லாட்சியில் சுமார் ஒண்ணேகால் கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கி பெண்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு செயல்வடிவம் கொடுத்து இந்திய ஒன்றியத்தில் புதிய புரட்சியை ஏற்படுத்தியும், தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மாநில முதலமைச்சர்களில் முதல் இடத்தை தக்க வைத்தும் முன்மாதிரி முதலமைச்சராகத் திகழும் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசியல் ஆசானாகவும், திராவிட இயக்கத்தின் தீரராகவும், தமிழ்நாடு மக்களின் முன்னேற்றத்திற்கு தனது வாழ்நாள் முழுவதும் தமிழ்க் கொடி ஏந்தி போராடியவராகவும், தமிழ்நாடு முதலமைச்சராக ஐந்து முறை பொறுப்பு வகித்தவராகவும், தமிழ்நாட்டை செதுக்கிய நவீன சிற்பியாக வும், அடித்தட்டு மக்களை முன்னேற்றமடைய உழைத்தவருமான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கிட ஒன்றிய அரசை வலியுறுத்தி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படு கிறது.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் 2024-25ஆம் கல்வியாண்டின் பங்குத்தொகையான ரூ.2152 கோடியை தமிழ்நாடு அரசுக்கு வழங்க மறுத்துள்ளது ஒன்றிய அரசு. அதே வேளையில் தேசிய கல்விக்கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டால்தான் நிதியை விடுவிக்க முடியும் என நிர்பந்தித்து சுமார் பதினைந்தாயிரம் ஆசிரியப் பெருமக்களுக்கும் மேல் மாத ஊதியம் வழங்கிட முடியாத நிலையையும், தமிழ்நாட்டு மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்க முடியாத அளவிற்கான சிக்கலையும் ஒன்றிய அரசு உருவாக்க முயற்சிக்கின்றது. எனவே ஒன்றிய அரசு உடனே நிதியினை விடுவிக்க வலியுறுத்தியும், ஒன்றிய பாரதிய ஜனதா ஆட்சியின் இந்த மாநில உரிமைகளைப் பறிக்கும் போக்கை கண்டித்தும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 111 நிகழ்ச்சிகள் நடத்தியதற்காகவும், அதில் முத்தாய்ப்பாக திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவியமைக்காகவும் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 16.08.2024 அன்று நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழக தலைவர் அவர்களால் நமது மாவட்டக் கழகச் செயலாளர் அவர்கள் பாராட்டப்பட்டார். கழகத்தின் மாவட்டச் செயலாளர் என்றால் மாவட்ட ஆட்சியருக்கு சமம்' என்ற புரவலர் அன்பில் அவர்களின் முழக்கத்தை மேற்கோள் காட்டி மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களைப்பாராட்டிய கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் வருமாறு:-.

1. திருவெறும்பூர் தொகுதியில் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு கட்டடம். சிப்காட் தொழிற்கூடம். ஒலிம்பிக் அகாடமி. மாதிரிப்பள்ளி. புதிய பேருந்து நிலையம் புதிய மத்திய சிறைச்சாலை. சூரியூர் ஊராட்சியில் ஜல்லிக்கட்டு மைதானம். தீயணைப்பு நிலையம். பெரிய பாலங்கள். புதிய அரசுக் கட்டடங்கள். புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள். புதிய பேருந்து மற்றும் வழித்தடங்கள், நீர்நிலைகள் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகள்.

2. மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் அரசு கலை அறிவியல் கல்லூரி, சிப்காட் தொழிற்கூடம். புதிய கூட்டு குடிநீர் திட்டம். புதிதாக மழைநீர் வடிகால் அமைத்தல். நாற்பது ஆண்டுகால கோரிக்கைகளான இரு பாலங்கள். மணப்பாறை நகரத்தில் சுற்று வட்டச் சாலை அமைத்தல். அரசு தொழிற் பயிலகம். புத்தாநத்தம் புதிய சுற்றுவட்டச் சாலை. புதிய பேருந்து மற்றும் வழித்தடங்கள். நீர்நிலைகள் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகள்.

3. திருச்சி கிழக்கு தொகுதியில் புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மற்றும் சாலை திட்டங்கள். சார்பதிவாளர் அலுவலகம். காவல் நிலையம். தாலுகா அலுவலகம். மாநகராட்சி மண்டல அலுவலகம் என பல்வேறு புதியகட்டடங்கள். புதிய பேருந்துகள் மற்றும் வழித்தடங்கள். சாலை வசதிகள். புதியநகர்புற நல வாழ்வு மையங்கள். புதிய நியாய விலை கடைகள் உள்ளிட்ட எண்ணற்றப் பணிகள் நடந்து வருகிறது.

இந்த மூன்று தொகுதிகளுக்கும் அரசுத் திட்டங்களை வாரி வழங்கிய கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றி தெரிவிக்கின்றது.

மதுரை, கோவை போன்ற பெரு நகரங்களுக்கு அடுத்ததாக திருச்சியில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்க ஒப்புதல் வழங்கி, திருச்சி மாவட்ட மக்களின்இளைஞர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், பரிந்துரை செய்து பெற்றுக்கொடுத்த விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும். இந்நூலகம் அமைவதற்கு முதன்முதலில் முன்னெடுப்பை தொடங்கிய மாவட்டக் கழகச் செயலாளர் துறை சார்ந்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கும் நன்றி தெரிவித்து ஒருமனதாக தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

தனது திராவிட மாடல் ஆட்சியில் புரிந்த சாதனைகளால் 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் 100 சதவீதம் வெற்றியைப்

பெற்றுக்கொடுத்த கழகத் தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தனது ஓயாத உழைப்பினாலும் வழிகாட்டுதலினாலும் நாற்பதுக்கு நாற்பது எனும் வெற்றியை உறுதி செய்த கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், திருச்சி நாடாளுமன்றத் தொகுதி வெற்றிக்கு திருச்சி கிழக்கு மற்றும் திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளிலும், கரூர் நாடாளுமன்ற தொகுதி வெற்றிக்கு மணப்பாறை சட்டமன்றத் தொகுதியிலும் பெருவாரியான வாக்குகளைப் பெற்று கொடுத்தமைக்காக திருச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலில் 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்று, 'தமிழ்நாடு முழுவதும் 200 தொகுதிகளில் வெற்றி' எனும் கழகத் தலைவர் அவர்களின் இலக்கிற்கு துணை நிற்போம் என உறுதியேற்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

பொது உறுப்பினர் கூட்டத்தில் சிறப்பு தீர்மானமாக எட்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருச்சி தெற்கு மாவட்டக் கழக தொண்டர்களின் வேண்டுகோளை ஏற்று எட்டாவது தீர்மானமாக அதை எட்டுகின்ற தீர்மானமாக அது கிட்டுகின்ற தீர்மானமாக நம்முடைய இளைஞர் அணி செயலாளர் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களை துணை முதலமைச்சர் ஆக்கிட வேண்டுமென தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்களிடம் மற்றும் தமிழக அரசிடம் இருக்கின்ற வேண்டுகோள்.

கோரிக்கையை ஏற்று ஒட்டுமொத்த இயக்கத்தினுடைய இந்த வேண்டுகோளை எட்டாவது தீர்மானமாக வைத்து அந்த தீர்மானத்தை நீங்கள் அனைவரும் உங்கள் கரகோஷத்தின் மூலமாக எட்டாவது தீர்மானமாக நிறைவேற்றி தாருங்கள் என கேட்டுக்கொண்டார்.



சேலம் மத்திய மாவட்டம் மாநகரம் கிச்சிப்பாளையம் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர். ஜி.கே..சுபாசு, மாநகர செயலாளர். பா. ரகுபதி, துணைச் செயலாளர். வி.கணேசன் பகுதி செயலாளர். கே.ஜெய், எஸ்.ஆர். அன்வர். தேவி பாலன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி ஈரோடு வடக்கு மாவட்டம் பவானி நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நகரக் கழக செயலாளர் ப.சீ.நாகராசன் தலைமையில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் கலந்து கொண்டு வருகிற சட்டமன்ற தேர்தலில் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் ஒன்றிய கழக துணைச் செயலாளர் சத்தியமூர்த்தி, பவானி நகர மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோ, தலைமை கழக பேச்சாளர் பவானி கண்ணன், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவேங்கடம், துணை அமைப்பாளர் என்.சுரேஷ், எம்.ஆர்.துரை, இந்திரஜித், ரவி, கு.சின்னம்மாள், நல்லசிவம், மா.சுப்பிரமணியம், தவமணி, வழக்கறிஞர் கணேசன், சண்முகசுந்தரம், ராஜசேகர், பாவை ராஜா, ஜெகதீஷ், கார்த்தி, சுமதி, விமல் உள்ளிட்ட BLA2 பாகமுகவர்கள், கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டிற்கு

# கல்வி - இரயில்வே திட்டங்களுக்கான நிதியை வழங்காத ஒன்றிய அரசு!

## கன்னியாகுமரியில் துரை வைகோ பேட்டி!

கன்னியாகுமரி, செப். 3–


கன்னியாகுமரியில் துரை வைகோ அளித்த பேட்டி வருமாறு:–

ஒன்றிய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழகத்திற்கான 2023 –24ம் ஆண்டிற்கான கல்வி நிதி ரூ. 2,249 கோடி பாக்கி வைத்துள்ள நிலையில். இவ்வாண்டு ஜூன் மாதத்திற்குள் தரவேண்டிய ரூ.500.00 கோடியை தராது காலம் தாழ்த்துவதால், தமிழகத்தில் உள்ள ஆசிரியர்கள் 15,000ம் பேருக்கு மாத ஊதியம் கொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரா பிரதானை, தமிழக கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உடன் சென்று தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து மனு கொடுத்தோம். மாணவர்களின் ,ஆசிரியர்களுக்கான இந்த நிதி குறித்து, ஒன்றிய கல்வி அமைச்சரிடம் கனிமொழி கருணாநிதி எம்.பி.,வி.சி.க. தலைவர் திருமாவளவன் ஆகியோர் எடுத்து தெரிவித்தார்கள்.

ஒன்றிய கல்வி அமைச்சர் தெரிவித்த பதில் தேசிய கல்வி கொள்கையை ஆதரித்து தமிழகம் கையெழுத்து இட்டால் நிதியை உடனே அனுமதிக்கிறோம் என்று தெரிவித்தார். இது குறித்து தமிழக கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ள கருத்து இரண்டு திட்டங்களுக்கு வேறுபாடுகள் உள்ளன. ஒன்றிய அரசின் தேசிய கல்வி கொள்கையை, தமிழகத்தை போன்று வேறு 5 மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தெளிவு படுத்தியுள்ளார்.

அண்மையில் பழனியில் நடந்த முத்தமிழ் முருகன் தமிழ் கடவுள் என்ற



விழாவை நான் வரவேற்கிறேன். அது ஒரு கலாச்சார விழா. இந்த விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இது மதம் சார்ந்த விழா அல்ல. சகோதர மதங்களில். ரம்சான் நோன்பு, கிறிஸ்துமஸ் விழாவின் போது கேக் வெட்டுவது போன்று எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ள விழா போன்றது பழனியில் நடந்த முருகன் முத்தமிழ் விழா. ஒரு குறிப்பிட்ட இயக்கம் இந்து மதத்தினை சொந்தம் கொண்டாடுவதை இந்த விழா உடைத்துள்ளது.

இரயில்வே திட்டங்களுக்கு முழுமையான நிதியை தமிழகத்திற்கு ஒன்றிய அரசு வழங்கவில்லை. 12 ஆண்டுகளுக்கு முன்பாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் கூட கிடப்பில் கிடக்கிறது இதே போல் மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் நிதி பங்களிப்பு இல்லை. பல்வேறு சிரமங்களுக்கு இடையே தான் மெட்ரோ ரயில் பணி நடைபெறுகிறது. தற்போது பல்வேறு பகுதிகளில் மெட்ரோ பணியால் சிரமம் ஏற்பட்டுள்ளது

இவ்வாறு துரை வைகோ எம்.பி. குறிப்பிட்டார்.

# நாகை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, செப்.3 -

நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாகை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாகை கோட்டைவாசல்படியில் உள்ள வி.பி.என்.திருமண மஹாலில் நாளை (4.9.2024 - புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் நாகை மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில்



மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக செயலளார்கள், நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்.

1. கழக முப்பெரும் விழா,

2. 2026 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரம் கிளை, வார்டுகள் தோறும் தொடங்குதல்,

3.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சடகோபன்

**செப்டம்பர் 3 (1979)**



**சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.**

**1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.**

**கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.**

**தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**